Mercantile Investments and Finance PLC

# மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ

236, காலி வீதி, கொழும்பு 03.

தொலைபேசி: 011-2343720-7 www.mi.com.lk

## 2021 செப்டெம்பர் 30இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான முக்கிய நிதியியல் தரவுகள் (கணக்காய்வு செய்யப்படாதது)

### வருமானக் கூற்று

| ரூபா மில்லியனில் | 01/04/2021 இலிருந்து 30/09/2021 வரை | 01/04/2020 இலிருந்து 30/09/2020 வரை |
|---|---|---|
| வட்டி வருமானம் | 3,502 | 3,230 |
| வட்டிச் செலவு | (1,249) | (1,801) |
| **தேறிய வட்டி வருமானம்** | **2,253** | **1,429** |
| வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகளிலிருந்தான இலாபம்/(நட்டம்) | 42 | - |
| ஏனைய வருமானம் | 71 | 58 |
| தொழிற்பாட்டு செலவினங்கள் (பெறுமதி இழப்பு நீங்கலாக) | (1,156) | (960) |
| பெறுமதி இழப்பு | (607) | (144) |
| வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்) | 604 | 384 |
| வரிகள் * | (313) | (217) |
| **வரிக்குப் பின்னரான இலாபம்/ (நட்டம்)** | **291** | **167** |

* நேரடியற்ற வரிகள் மற்றும் நேரடி வரிகள் (நிறுவன வருமான வரி) உள்ளடங்கலாக

### நிதியியல் நிலைமைக் கூற்று

| ரூபா மில்லியனில் | 2021 செப்டெம்பர் 30ல் உள்ளவாறு | 2020 செப்டெம்பர் 30ல் உள்ளவாறு |
|---|---|---|
| சொத்துக்கள் | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 2,420 | 2,531 |
| அரச பிணையங்கள் | 1,754 | 1,696 |
| தொடர்பான தரப்பினிடமிருந்து வர வேண்டியவை | 72 | 74 |
| கடன்கள் (தொடர்பான தரப்பினிடமிருந்து வரவேண்டியவை நீங்கலாக)** | 29,995 | 29,782 |
| பங்குரிமை மூலதனத்திலுள்ள முதலீடுகள் | 3,866 | 2,731 |
| முதலீட்டுச் சொத்துக்கள் | 237 | 238 |
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் ** | 3,494 | 3,356 |
| ஏனைய சொத்துக்கள் | 584 | 842 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **42,423** | **41,251** |
| பொறுப்புக்கள் | | |
| வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை | 2,917 | 5,059 |
| தொடர்பான தரப்பினருக்கு செலுத்த வேண்டியவை | - | - |
| வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்புக்கள் | 24,235 | 22,040 |
| ஏனைய கடன்பாடுகள் | 2,568 | 2,642 |
| ஏனைய பொறுப்புக்கள் | 1,964 | 2,090 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **31,683** | **31,830** |
| பங்குரிமை மூலதனம் | | |
| கூறப்பட்ட மூலதனம் | 36 | 36 |
| நியதி ஒதுக்கு நிதியம் | 796 | 761 |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் | 2,992 | 2,183 |
| ஏனைய ஒதுக்குகள் | 6,916 | 6,440 |
| **மொத்த பங்குரிமை** | **10,740** | **9,421** |
| **மொத்த பொறுப்புக்கள் மற்றும் பங்குரிமை** | **42,423** | **41,251** |
| பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி (ரூ) | 3,573 | 3,134 |

** கூறப்பட்ட தொகை பெறுமதி இழப்பு மற்றும் தேய்மானம் நீங்கலானவையாகும்.

### தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள்

| விடயம் | 2021 செப்டெம்பர் 30ல் உள்ளவாறு | | 2020 செப்டெம்பர் 30ல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|
| ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமை | உண்மை | தேவையானது | உண்மை | தேவையானது |
| அடுக்கு 1 மூலதன போதுமை விகிதம் | 15.47% | 7.00% | 12.52% | 6.50% |
| மொத்த மூலதன போதுமை விகிதம் | 17.12% | 11.00% | 14.36% | 10.50% |
| வைப்பு பொறுப்புக்களுக்கான மூலதன நிதிய விகிதம் | 37.66% | 10.00% | 42.74% | 10.00% |
| கடன் சொத்துப்பட்டியலின் தரம் | | | | |
| மொத்தச் செயற்படாக் கடன்களின் விகிதம் | | 14.92% | | 18.91% |
| தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | | 3.34% | | 5.51% |
| மைய மூலதன விகிதத்திற்கான தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | | 16.81% | | 35.75% |
| ஒதுக்கு பாதுகாப்பு விகிதம் | | 60.17% | | 55.97% |
| இலாபத்தன்மை | | | | |
| தேறிய வட்டி இலாபம் | | 10.62% | | 6.93% |
| சொத்துக்கள் மீதான வருவாய் | | 2.85% | | 1.86% |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் | | 5.42% | | 3.54% |
| வருமானத்திற்கான செலவு விகிதம் | | 48.84% | | 64.55% |
| திரவத்தன்மை | | | | |
| தேவையான திரவச் சொத்துகளுக்கான கிடைக்கத்தக்க திரவச் சொத்து (குறைந்தபட்சம் 100%) | | 178.52% | | 316.89% |
| வெளிவாரி நிதியத்திற்கான திரவச் சொத்துக்கள் | | 14.61% | | 14.25% |
| விஞ்ஞாபனத் தகவல்கள் | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | | 39 | | 39 |
| வெளிவாரி கொடுகடன் தரமிடல் | | நீண்டகால நிதி நிறுவன மதிப்பீடு ஃபிட்ச் தரவின்படி BBB-(lka) (மறை நோக்கு) | | நீண்டகால நிதி நிறுவன மதிப்பீடு ஃபிட்ச் தரவின்படி BBB-(lka) (மறை நோக்கு) |

### உறுதிப்படுத்தல்:

கீழே கையொப்பமிட்டுள்ள மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் பிரதான நிதி அதிகாரி, நிதி இயக்குனர், நிர்வாக இயக்குனர் மற்றும் இணங்குவிப்பு அலுவலராகவுள்ள நாங்கள் கூட்டாக பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றோம்.

(அ) மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

தேவா அந்தனி
பிரதான நிதியியல் அதிகாரி / மூத்த பொது மேலாளர்

ரமிது கொஸ்தா
இணங்குவிப்பு அலுவலர்

ஷேர்மல் ஜயசூரிய
நிதி இயக்குனர்

ஜெராட் ஒன்டாச்சி
நிர்வாக இயக்குனர்

15/11/2021

### விளக்கங்கள் / சொற்றொகுதி

| | |
|---|---|
| மூலதன போதுமை விகிதம்: | வைப்பாளர்களையும் கடன் வழங்கியோரையும் பாதிக்காமல் இழப்புக்களை நிதியியல் நிறுவனங்கள் ஈர்த்துக்கொள்வதற்கான இயலாற்றலை எடுத்துக் காட்டுகின்றது. இவ்விகிதமானது பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்டவாறு, இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களினால் மூலதனத்தினை வகுப்பதன் மூலம் கணிக்கப்படுவதுடன் உயர்ந்த விகிதம் இழப்புக்களை சிறந்த முறையில் ஈர்த்துக் கொள்ளும் இயலளவினை எடுத்துக்காட்டுகின்றது. |
| செயற்படாக் கடன்களின் விகிதம்: | நிதியியல் நிறுவனங்களின் மொத்தக் கடன் சொத்துப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள செலுத்தப்படாத கடன்கள் மற்றும் முற்பணங்களின் மட்டத்தினை எடுத்துக் காட்டுகிறது. உயர்ந்த விகிதம் மோசமான சொத்துக்களின் தரத்தினையும் உயர்ந்த கொடுகடன் இடர்நேர்வுகளையும் எடுத்துக்காட்டுகின்றது. |
| ஒதுக்கு பாதுகாப்பு விகிதம்: | பிரச்சனைகளுக்குரிய கடன்களையும் முற்பணங்களையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் ஒதுக்குகள் போதுமான மட்டத்தில் இருப்பதனை எடுத்துக்காட்டுகிறது. உயர் மூலதன போதுமை விகிதத்துடன் கூடிய உயர்விகிதம் என்பது கடன் இழப்பு ஒதுக்குகளுக்கு அப்பால் எதிர்பாராமல் ஏற்படும் இழப்புக்கள் உட்பட எதிர்கால கொடுகடன் இழப்புக்களைச் சிறந்த முறையில் எதிர்த்து நிற்கக்கூடிய நிதியியல் நிறுவனமொன்று எனப் பொருள்படும். |
| தேறிய வட்டி இலாபம்: | நிதியியல் நிறுவனத்தின் மைய வியாபாரத் தொழிற்பாடுகளின் இலாபத்தன்மையினை எடுத்துக்காட்டுகிறது. அதாவது கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குதல் மற்றும் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல். |
| வருமானத்திற்கான செலவு விகிதம்: | தொழிற்பாட்டு செலவை பிரதிநிதித்துவப்படுத்துகிறது, தேறிய வருவாயின் சதவீதமொன்றாக கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான சேத இழப்பு அறவீடுகள் நீங்கலாக (தேறிய வட்டி வருமானம் மற்றும் ஏனைய வருமானம்) உயர்வான இலாபத்தன்மையில் குறைவான விகிதம் ஏற்படும். |
| திரவச் சொத்துக்கள்: | திரவச் சொத்து என்பது இலகுவாக காசாக மாற்றிக் கொள்ளக்கூடிய சொத்தொன்றாகும். |
| உச்ச எல்லை: | இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட உச்ச எல்லை. |
| அளவினைக் குறைத்தல்: | இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்டவாறு வியாபாரத் தொழிற்பாடுகளைப் படிப்படியாகக் குறைத்தல். |
| முடக்குதல்: | கம்பனியின் மேலும் இடம்பெறக்கூடிய கொடுக்கல்வாங்கல்களை தடை செய்வதற்காக நடைமுறைக்கிடப்படுகின்ற மத்திய வங்கியின் கட்டளையொன்று. |
| அடுக்கு 1 மூலதனம்: | நிரந்தரமான பங்குடமையாளர் பங்குரிமை மூலதன ஒதுக்குகளை எடுத்துக்காட்டுகிறது. |
| மொத்த மூலதனம்: | அடுக்கு 1 இனையும் பங்குரிமை மூலதனம் மற்றும் படுகடன் பண்புகளுடன் கூடிய சாதனங்கள் மீள்மதிப்பீட்டு இலாபம், பெறுமதி இழப்புப் படிகள் என்பனவற்றை உள்ளடக்கிய துணை நிரப்பு மூலதனத்தினையும் பிரசன்னப்படுத்துகிறது. |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள்: | ஐந்தொகையிலுள்ள இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட ஐந்தொகைக்கு வெளியேயான சொத்துக்களுக்கு சமமான மொத்தக் கொடுகடன் என்பனவற்றின் கூட்டுத்தொகையாகும். |
| அடுக்கு 1 மூலதன விகிதம்: | இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் சதவீதமாக அடுக்கு 1 மூலதனம். |
| மொத்த மூலதன விகிதம்: | இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் சதவீதமாக மொத்த மூலதனம். |
| மூலதன நிதியம்: | இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட செலுத்தப்பட்ட மூலதனம், நிரந்தர கட்டற்ற ஒதுக்குகள் மற்றும் வேறு ஏதேனும் பிணையங்கள். |
| செயற்படாக் கடன்கள்: | கடன்பாட்டாளர் ஒருவர் செலுத்தத்தவறிய கடன் அத்துடன் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டல்களின் படி முதல் அல்லது அத்துடன்/ வட்டியை அட்டவணையின் படி செலுத்தாமல் இருப்பது. |
| தேறிய வட்டி இலாபம்: | மொத்தத் தேறிய சொத்துக்களின் சதவீதமாக (காலமுடிவில் உள்ளவாறு) ஆண்டு மயப்படுத்தப்பட்ட தேறிய வட்டி வருமானம் (வட்டிச் செலவுகளைக் கழித்த வட்டிவருமானம்) காலமுடிவில் உள்ளவாறு. |
| சொத்துக்களின் மீதான வருவாய்: | மொத்த தேறிய சொத்துக்களின் சதவீதமாக ஆண்டு மயப்படுத்தப்பட்ட வரிக்கு முன்னரான இலாபம் (காலமுடிவில் உள்ளவாறு). |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய்: | மொத்த மூலதனத்தின் சதவீதமாக ஆண்டு மயப்படுத்தப்பட்ட வரிக்குப்பின்னரான இலாபம் (காலமுடிவில் உள்ளவாறு). |
| வெளிவாரி நிதியம்: | வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகளை மாத்திரம் உள்ளடக்குகிறது. |